செ.வெ.எண்: 376 நாள்: 01.08.2019

**குழந்தைகளுக்கு தாய்மார்கள் கட்டாயம் தாய்பால் கொடுக்க வேண்டும் என உலகதாய்பால் வார விழா தொடக்க நிகழச்சியில் மாவட்ட ஆட்சியர் வேண்டுகொள்.**

-------------------------------------------

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அருண்ஸ் மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் நடத்தப்பட்ட உலகத்தாய்பால் வார விழா தொடக்க நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று கொழு கொழு குழந்தைகளுக்கு பரிசுகள் இன்று (01.08.2019) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தொவித்ததாவது:-

பிறந்த குழந்தையின் முதல் உணவும் முதல் உணர்வும் தாய்ப்பால் தான் சமூக பொருளாதார மாற்றங்களால் உலகளவில் தாய்ப்பால் தரும் பழக்கம் மக்களிடையே குறைந்து வருகிறது. பெண்கால பெண்களின் பணி வாய்ப்பு பொருளாதார முன்னேற்றம் போன்றவை காரணமாக தாய்ப்பாலுட்டி குழந்தையின் எதிர்கால நல்வாழ்வுக்கு வலுவான அடித்தளம் அமைப்பது என்பது குறைந்து விட்டது. குழந்தை பிறப்பதற்கு முன்பே குழந்தைகளுக்கு தாய்பால் தருவது பற்றிய சரியான விளக்கங்களையும், தாய்பாலின் பல வித நன்மைகளை தாய் தந்தை இருவரும் அறிந்து சொல்வது அவசியம் குழந்தை பிறந்து உரிய கால விடுப்புக்கு பிறகு மனைவி வேலைக்கு திரும்பும்போது அவரது பணியிடத்தில் பாதுகாப்பான குழந்தைகள் காப்பகம், தாய்பாலை சேமிக்கும் வசதிகள் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் ஊட்டுவதால் அறிவான நல்ல உடல் நலத்துடன் வளரும் குழந்தைகள் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்ல சொத்து தாய்ப்பால் முக்கியத்துவம் பற்றியில் அறிவியல் பாடத்தில் சேர்க்க பட்டு தாய்பால் மவுசு அறிந்து அரசு பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் தாய்பால் ஊட்டும் அறை திறந்துள்ளார்கள். எனவே குழந்தைகளுக்கு தாய்மார்கள் கட்டாயம் தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள் மாவட்ட திட்ட அலுவலர் திரு.ஜெயசூர்யா, மாநகராட்சி ஆணையாளர் திருமதி.விஜயலெட்சுமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.செந்தில் , சுகாதார பணிகள் இணை இயக்குநர் மரு.செந்தில்குமார், மாநகராட்சி நல அலுவலர் மரு.சதீஷ் குமார், இந்திய வானொலி நிலைய முனைவர் சந்திரபுஷ்பம், , குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.ராஜபிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி